02.02.2024

அ.வ.எண். 217/2022

வாசா.1 - அருள்பிரகாசம்

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் என் தகப்பனாருக்கும், தாத்தாவுக்கும் இடையே ஏற்பட்ட ஆவணம். நான் சொல்வது தவறு என்றும், என் கொள்ளுத்தாத்தா, எனது அப்பாவிற்கும் இடையே ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். என் தகப்பனார் மைனராக இருந்த காலத்தில் அவரது தாயாரை கார்டியனாக காட்டி சி-அட்டவணை சொத்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் ஏ,சி பாகஸ்தர்கள் தங்கள் பங்கு பூமிக்கு, 40 நம்பர் காலைக்கு போவதற்கு மாமூலாய் போடப்பட்ட 59/3, 4, 5, 43/1, 2 இந்த காலைகளில் கிழகோட்டில் தென்வடலாக வண்டி கால்நடை வகையறா ஓட்டி தடம் ஏ, சி பாகஸ்தர்கள் நடந்துகொள்ள வேண்டியது என எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

43/1, 2 காலை யாருக்கு ஆதியில் பாத்தியம் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் கீழ் சேர்ந்த சொத்து கிடையாது. 43/2 எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது. 59/5 பூமி எங்களுக்கு பாத்தியப்பட்டது, 59/4 பூமி யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. 59/3 காலை மாரியப்ப கவுண்டர் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது. மேற்படி 59/3 காலை எங்களது குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது இல்லை என்னும் சமயத்தில் அடுத்தவர்கள் பூமியில் எங்களுக்கு பாதை உரிமை உள்ளதாக நாங்கள் பாகப்பிரிவினை பத்திரத்தில் எவ்வாறு எழுதலாம் என்றால் அது எனக்கு தெரியாது, அப்படி எழுதியிருப்பது தவறு என்றால் சரியல்ல.

எங்களது கொள்ளுத்தாத்தா மணியக்காரர், என் தாத்தா மணியக்காரர், என் தகப்பனாரும் மணியக்காரர் தான். என் கொள்ளுத்தாத்தா, என் தகப்பனார், என் தாத்தா ஆகியோர் ஆதிக்க வர்க்கத்தில் இருந்ததால் புல எண்.59/3 உரிமையாளர் சம்மதம் இல்லாமல் அந்த இடத்தை தடமாக காட்டி எங்களுக்குள் ஒரு பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டனர் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுடைய 59/3 கிரயப் பத்திரத்தில் எங்களுக்கு தடம் இருப்பதாக ஏதாவது சரத்துகள் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் பின்னும் 40 நம்பர் காலைக்கு சி-பாகஸ்தர் தடம் நடந்துகொள்ள வேண்டியது, மேற்படி காலையில் பெரியநாயகி அம்மாள் பங்கு பூமியில் தெற்கு கோட்டில் கிழமேலாகவும் மேற்படி காலையில் ஏ-பாகத்தில் கிழகோட்டில் தென்வடலாகவும், சி-பாகஸ்தர் வண்டி கால்நடை

வகையறாக்கள் ஓட்டி தடம் நடந்துகொள்ள வேண்டியது. இதற்கு என்ன அர்த்தம் என்று எனக்கு புரியவில்லை.

புல எண்.40 ற்கு இரண்டு வழித்தடங்கள் காட்டப்பட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள முதல் வழி 59 நம்பர் காலை வழியாகவும், 2 வது வழி தற்பொழுது உபயோகத்தில் இல்லை. 59 நம்பர் காலையை தவிர வேறு வழி இல்லை என்று, நான் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 புல எண்.59 ற்கான புல வரைபடத்தின் 59/3 ற்கு நான் குறிப்பிடும்படி தடம் எதுவும் தனியாக வகைப்பாடு செய்யப்பட்டு காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதிகள் தனித்தனியாக புல எண்.59/3 ல் சுமார் 10 வருடங்களாக விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் ஆமாம். இவர்களது தகப்பனார் ஒரே பங்காக, 59/3 ல் இதற்கு முன்பு விவசாயம் செய்து வந்தார் என்றால் ஆமாம்.

59/3 ல் தற்பொழுது பிரதிவாதிகள் தங்களுக்குள் பிரித்துக்கொண்டதால் அவர்களது சௌகரிய பயன்பாட்டிற்காக வழக்கு தடத்தை அவர்களுக்குள் விட்டு பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. 59/3 பூமி அதற்கு தென்புறம் வாய்க்கால், அதற்கு தென்புறம் எங்களது பூமி, எங்களது பூமிக்கு இரும்பு கேட் அமைத்து வைத்துள்ளோம். 59/3 பூமிக்கு தற்காலிக கேட் அமைத்திருந்தனர். மேற்படி தற்காலிக கேட்டை நாங்கள் புடுங்கி சென்று எரித்துவிட்டோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மூங்கில் தட்டி வைத்த தற்காலிக கேட் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அடுத்த புகைப்படம் எங்களுடைய பூமிக்கான இரும்பு கேட் அது பி.வா.சா.ஆ.1 மற்றும் 2. என்னிடம் காட்டப்படும் 3 வது புகைப்படத்தில் உள்ள எரிந்த நிலையில் உள்ள பகுதி தான் நாங்கள் மேற்படி தற்காலிக மூங்கில் தட்டி கேட்டை எரித்தததை அடையாளப்படுத்தக்கூடிய புகைப்படம் என்றால் சரியல்ல.

நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு வந்த பின்னிட்டு அன்று இரவு மேற்படி தட்டிகேட்டை நாங்கள் எரித்துள்ளோம் என்றால் சரியல்ல. முதல் முறை காவல் நிலையத்திற்கு செல்லும்போது என்ன எழுதிக்கொடுத்துவிட்டு வந்தோம் என்றால் உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்வதாக எழுதிக்கொடுத்துவிட்டு வந்தோம். கேட்டை எரித்ததற்கு 2 வது முறை காவல் நிலையம் சென்றோமா என்றால் இல்லை. பிரதிவாதிகளுடைய சொந்த இடத்தை எங்களுடைய தடமாக மாற்ற முயற்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. 100 வருடமாக அந்த தாவா தடம் இருப்பதாக

நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், கடந்த 10 வருடமாக தான் பிரதிவாதிகள் அவர்களுக்குள் பாகம் பிரிக்கையில் மேற்படி தடத்தை அமைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

எங்களது முன்னோர்கள் அவர்களது ஆதிக்கத்தை காட்ட அடுத்தவர்கள் இடத்தை தடம் எழுதியதை தொடர்ந்து செயல்படுத்த நானும் முயற்சித்து வருகிறேன் என்றால் சரியல்ல, எனவே நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல, எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/அருள்பிரகாசம்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected

N RENUGA

Digitally signed by N RENUGA
Date: 2024.02.02 18:11:06 +0530

District Munsif
Sulur